வாசிக்க: சங்கீதம் 139:1-12

***"பிரம்பைக் கையாளாதவன் தன் மகனைப் பகைக்கிறான்; அவன் மேல் அன்பாயிருக்கிறவனோ அவனைத் தண்டிக்கிறான்" (நீதி 13:24)***

அனைவருக்கும் நன்கு புரியக்கூடிய மொழி ஒன்று உண்டென்றால் அது பிரம்புதான்! அநேக வேளைகளில் தேவன் தமது வசனத்தினாலும், ஆவியினாலும், விடும் எச்சரிக்கைகளைக் காதில் வாங்காமல் சென்றுகொண்டிருந்தால் அவர் பிரம்பைக் கையிலெடுப்பார். பிரம்பில் இருக்கும் உடனடி அற்புத வல்லமையை அன்பினிமித்தம் கண்டிக்கும் பெற்றோரே அறிவர்! நேசிக்கும் எந்த மகனையும் அவர் சிட்சிக்கிறார் (எபி 12:25). பரம பிதாவுக்கு, தாம் கெடுத்த பிள்ளையென்று ஒருவருமில்லை. எவரையும் அப்படி விடமுடியாத அளவு அன்பு! (எபி 12:6). அவர் நம்மைத் தண்டியாமல் விடுவதே பெரிய தண்டனை!

பயண விபத்துக்கள் பெருகி வருகின்ற இக்காலத்தில் வழியில் பாதங்கள் இடறாமலும் (சங் 91:11,12), உறங்காமலும், தூங்காமலும் (சங் 121:4) காக்கும் தேவன்தான் நம் தேவனாயினும், அற்பகாலம் மூண்ட கோபத்தினால் தமது முகத்தை அவர் இமைப்பொழுது மறைக்கவும் செய்யலாம் (ஏசா 54:7,8). தவறான வழியில் செல்லும் மகனை அமைதியாய் அப்படியே விட்டுவிடும் தந்தை உண்டோ? தேவனது பரிபூரண சித்தத்திற்கு மாறாகச் சென்ற தீர்க்கதரிசியின் காலை அந்தக் கழுதை சுவரோடு நசுக்கிற்றே! (எண் 22:25). யோனா கடலில் தூக்கியெறியப் பட்டாரே; மீன் வயிற்றிற்குள்ளிருந்தல்லவா மனந்திரும்பினார்! அடுத்த பிரசங்கம் ஆயத்தம்பண்ண நேரமும் "மீன் வீட்டில்" கிடைத்தது. இப்படிச் சொல்வதால் விபத்துகள் யாவும் கடவுளின் தண்டனை எனக் கூறவில்லை; அதே நேரம் துக்க காரியங்கள் நிகழும்போது நமது வாழ்வைச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும் என்பதே உடனடிப் பாடம் (யோபு 13:23).

பரிசுத்தம் நமக்குத் தூரமாயிற்றோ? தமது பிள்ளைகள் பாவத்தை நஞ்சென வெறுத்து, நீதியை அமுதமென விரும்பவேண்டுமென்பதே தேவனது ஏக்கம். நம்மைப் பிறரோடு ஒப்பிட்டுப் பார்த்து திருப்தியடைந்துவிடுகிறோம். ஆனால் தேவனோ நாம் "அவரது" பரிசுத்தத்தை எட்டும்வரை அமருவதில்லை (எபி 12:10). அவரது மூத்த மகனைப் போல நாம் மாறும்வரை கிளை நறுக்கும் கத்தியைக் கீழே வைக்கமாட்டார். தேவன் யோபுவைக்குறித்து சன்மார்க்கன் என்று சாட்சி யிட்டிருந்தாலும் (யோபு 1:8), தேவனது உலைக்களத்தில் சென்று வந்தபின்பு, "என் காதினால் உம்மைக் குறித்துக் கேள்விப்பட்டேன்; இப்பொழுதோ என் கண்கள் உம்மைக் காண்கின்றன. ஆகையால் நான் என்னை அருவருத்து தூளிலும் சாம்ப லிலும் இருந்து மனம்திரும்புகிறேன்" என்று யோபு கூறினார் (யோபு 42:5,6).

அரசன் எசேக்கியா மனமேட்டிமையடைந்தபோது அவரது நாட்கள் எண்ணப் பட்டுவிட்டன என்று தேவன் அறிவித்தார். உடனே மனங்கசந்து மனந்திரும்பினார். தேவனும் மன்னித்து அவரது வாழ்நாளைக் கூட்டினார். அப்போதுதான் பாடுகிறார்: "என் ஆயுளின் ஆண்டுகளிலெல்லாம் என் ஆன்மாவின் கசப்பை நினைத்துக் கொள்வேன்" (ஏசா 38:15). பாடுகளின் பாக்கியம்!

*சோதனைகளும், வேதனைகளும் வரும்போதுதான்*
*எனது இருதயத்தின் பெருமை குணமாகிறது!*

*— ஜார்ஜ் விட்பீல்டு, 1714-1770, வெளிப்பிரசங்க வேந்தர்*